**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I , PADMANABHAPURAM**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.270/2018 P.W. 7/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சேகர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜையன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுனராக வேலைச் செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது அதை நான் எதற்காக போட்டேன் என்றால் 28.07.2018ம் தேதி அன்று தக்கலை காவல் ஆய்வாளர் காட்டாத்துறை ஜங்சனில் நடந்த வாகன விபத்து சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாயார் செய்தார். அதில் நானும் அங்கு நின்று கொண்டிருந்த சுரேஷ் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த கையெழுத்து **அ.சா.ஆ4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எத்தனை மணிக்கு ஆட்டோ ஸ்டான்டிற்கு செல்வேன் என்றால் காலை 06.00 மணிக்கு செல்வேன். ஆட்டோ ஸ்டாண்ட் எங்கு உள்ளது என்றால் வெள்ளிக்கோடு என்ற இடத்தில் உள்ளது. நான் எங்கு செல்வதற்காக காட்டாத்துறை ஜங்சனில் நின்றேன் என்றால் அந்த ஜங்சனில் என் நண்பர் சுரேஷ் இருந்தார் அதனால் நானும் அவருடன் அந்த இடத்தில் நின்று காலை 07.00 மணியளவில் நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தேன். போலீசார் என்னிடம் எத்தனை பேப்பரில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் ஒரு பேப்பரில் கையெழுத்து பெற்றார்கள். வழக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் எந்த நிலை காவளல் கையெழுத்து வாங்கினார் என்றால் காவல் ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து வாங்கினார். அவர் சீருடை அணிந்திருந்தாரா என்றால் சரிதான். அ.சா.1 யை எனக்கு

ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் காவலர்கள் அந்த இடத்திற்கு வந்தார்கள். அந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். விபத்து நடைபெற்றதா என்று கேட்டார்கள் அதன் பிறகு அவர்கள் தயார் செய்த பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள், அதில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. என் நண்பருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

இல்லை .

<u>**மறு விசாரணை :**</u>

இல்லை

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் .1

பத்மனாபபுரம்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I , PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.270/2018 P.W. 6/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. தினேஷ் சுதாகர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. திவாகரன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து அரசு ஊழியராக வேலைச் செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். அவர் என் மாமாவின் மகன் ஆவார். 27.08.2018ம் தேதி சுவாமியார்மடம் அருகே வாகன விபத்து ஏற்பட்டதாகவும் அதில் விஷ்ணுவின் அப்பாவும் இறந்துவிட்டதாக விஷ்ணு எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அதன் அடிப்படையில் நான் தக்கலை அரசு மருத்துவமனைக்கு வந்தேன். அங்கு பிணவறையில் எனது மாமா இராமகிருஷ்ணன் என்பவரின் சடலம் இருந்தது. காவல் ஆய்வாளர் என்னிடம் எனது மாமா இராமகிருஷ்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு என்னை சாட்சியாக இருக்கும் படி கூறினார். அதன் அடிப்படையில் நான் பிரேத விசாரணைக்கு சாட்சியாக இருந்தேன். மேலும் எனது மாமாவின் சடலத்தை நான் அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் தக்கலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** :

இல்லை .

<u>மறு விசாரணை</u>

இல்லை

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் .1
பத்மனாபபுரம்.